RAVI MATHS TUITION CENTER
WHATSAPP - 8056206308

10ஆம் வகுப்பு அறிவியல் MCQ

10th Standard

Exam Time : 00:01:00 Hrs **Total Marks : 1**

கொள்குறி வினாக்கள் MCQ 1108 x 1 = 1108

1) கீழ்க்கண்டவற்றுல் நிலைமம் எதனைச் சார்ந்தது?

(a) பொருளின் எடை (b) கோளின் ஈர்ப்பு முடுக்கம் (c) பொருளின் நிறை

(d) அ மற்றும் ஆ

2) கணத்தாக்கு கீழ்கண்டவற்றுள் எதற்குச் சமமானது?

(a) உந்த மாற்று வீதம் (b) விசை மற்றும் கால மாற்ற வீதம் (c) உந்த மாற்றம்

(d) நிறை வீத மாற்றம்

3) கீழ்கண்டவற்றில் நியூட்டனின் மூன்றாம் விதி எங்கு பயன்படுகிறது.

(a) ஓய்வுநிலையிலுள்ள பொருளில் (b) இயக்க நிலையிலுள்ள பொருளில்

(c) அ மற்றும் ஆ (d) சமநிறையுள்ள பொருட்களில் மட்டும்

4) உந்த மதிப்பை y அச்சிலும் காலத்தினை x அச்சிலும் கொண்டு ஒரு வரைபடம் வரையப்படுகிறது. இவ்வரைபட சாய்வின் மதிப்பு

(a) கணத்தாக்கு விசை (b) முடுக்கம் (c) விசை (d) விசை மாற்றவீதம்

5) விசையின் சுழற்ச்சி விளைவு கீழ்காணும் எந்த விளையாட்டில் பயன்படுகிறது.

(a) நீச்சல் போட்டி (b) டென்னிஸ் (c) சைக்கிள் பந்தயம் (d) ஹாக்கி

6) புவிஈர்ப்பு முடுக்கம் g-ன் அலகு ms^{-2} ஆகும். இது கீழ்காண் அலகுகளில் எதற்கு சமமாகும்.

(a) cms^{-1} (b) Nkg^{-1} (c) $N\ m^2\ kg^{-1}$ (d) $cm^2\ s^{-2}$

7) ஒரு கிலோகிராம் எடை என்பது _____ ற்கு சமமாகும்.

(a) 9.8 டைன் (b) 9.8×10^4 N (c) 98×10^4 டைன் (d) 980 டைன்

8) புவியில் M நிறை கொண்ட பொருள் ஒன்று புவியின் ஆரத்தில் பாதி அளவு ஆரம் கொண்ட கோள் ஒன்றிற்கு எடுத்துச் செல்லப்படுகிறது. அங்கு அதன் நிறை மதிப்பு.

(a) 4M (b) 2M (c) M/4 (d) M

9) நிறை மதிப்பு மாறாமல் புவியானது தனது ஆரத்தில் 50% சுருங்கினால் புவியில் பொருட்களின் எடையானது?

(a) 50% குறையும் (b) 50% அதிகரிக்கும் (c) 25% குறையும்

(d) 300% அதிகரிக்கும்

10) ராக்கெட் ஏவுதலில் _____ விதி/கள் பயன்படுத்தப்படுகிறது.

இதன் விடைகள் விலை ரூ 150 மட்டும் WHATSAPP – 8056206308

(a) நியூட்டனின் மூன்றாம் விதி (b) நியூட்டனின் பொது ஈர்ப்பியல் விதி

(c) நேர் கோட்டு உந்த மாறாக் கோட்பாடு (d) அ மற்றும் இ

11) A, B, C, D என்ற நான்கு பொருள்களின் ஒளி விலகல் எண்கள் முறையே 1.31, 1.43, 1.33, 2.4 எனில், இவற்றில் ஒளியின் திசைவேகம் பெருமமாக உள்ள பொருள் எது?

(a) A (b) B (c) C (d) D

12) பொருளின் அளவிற்கு சமமான, தலைகீழான மெய்பிம்பம் கிடைக்க பொருள் வைக்கப்பட வேண்டிய தொலைவு

(a) f (b) ஈறிலாத் தொலைவு (c) 2f (d) f க்கும் 2f க்கும் இடையில்

13) மின் விளக்கு ஒன்று குவிலென்சு ஒன்றின் முதன்மைக் குவியத்தில் வைக்கப்பட்டுள்ளது. மின் விளக்கு ஒளியூட்டப்படும் போது, குவி லென்சானது

(a) விரிக்கும் கற்றைகளை உருவாக்கும் (b) குவிக்கும் கற்றைகளை உருவாக்கும்

(c) இணைக் கற்றைகளை உருவாக்கும் (d) நிறக் கற்றைகளை உருவாக்கும்.

14) குவி லென்சின் உருப்பெருக்கமானது எப்போதும் _____ மதிப்புடையது.

(a) நேர்க்குறி (b) எதிர்க்குறி (c) நேர்க்குறி (அ) எதிர்க்குறி (d) சுழி

15) ஒரு குவி லென்சானது, மிகச்சிறிய மெய்பிம்பத்தை முதன்மைக் குவியத்தில் உருவாக்கினால், பொருள் வைக்கப்பட்டுள்ள இடம் _____

(a) முதன்மைக் குவியம் (b) ஈறிலாத் தொலைவு (c) 2f

(d) f க்கும் 2f க்கும் இடையில்

16) ஒரு லென்சின் திறன் -4D எனில் அதன் குவியத் தொலைவு

(a) 4மீ (b) -40மீ (c) -0.25மீ (d) -25மீ

17) கிட்டப்பார்வை குறைபாடு உடைய கண்ணில், பொருளின் பிம்பமானது _____ தோற்றுவிக்கப்படுகிறது.

(a) விழித் திரைக்குப் பின்புறம் (b) விழித்திரையின் மீது

(c) விழித் திரைக்கு முன்பாக (d) குருட்டுத் தானத்தில்

18) விழி ஏற்பமைவுத் திறன் குறைபாட்டைச் சரி செய்ய உதவுவது

(a) குவி லென்சு (b) குழி லென்சு (c) குவி ஆடி (d) இரு குவிய லென்சு

19) சொல் அகராதியில் உள்ள சிறிய எழுத்துக்களைப் படிப்பதற்கு உகந்த லென்சு எது?

இதன் விடைகள் விலை ரூ 150 மட்டும் WHATSAPP – 8056206308

(a) 5 செ.மீ குவிய தூரம் கொண்ட குவிலென்சு

(b) 5 செ.மீ குவிய தூரம் கொண்ட குழி லென்சு

(c) 10 செ.மீ குவிய தூரம் கொண்ட குவி லென்சு

(d) 10 செ.மீ குவிய தூரம் கொண்ட குழி லென்சு

20) ஒரு முப்பட்டகத்தின் வழியே செல்லும், நீலம், பச்சை மற்றும் சிவப்பு நிறங்களின் திசை வேகங்கள் V_B, V_G, V_R எனில் பின்வருவனவற்றுள் எச்சமன்பாடு சரியானது?

(a) $V_B = V_G = V_R$ (b) $V_B > V_G > V_R$ (c) $V_B < V_G < V_R$ (d) $V_B < V_G > V_R$

21) பொது வாயு மாறிலியின் மதிப்பு

(a) 3.81 J மோல்$^{-1}$ K^{-1} (b) 8.03 J மோல்$^{-1}$ K^{-1} (c) 1.38 J மோல்$^{-1}$ K^{-1}

(d) 8.31 J மோல்$^{-1}$ K^{-1}

22) ஒரு பொருளை வெப்பப்படுத்தினாலோ அல்லது குளிர்வித்தாலோ அப்பொருளின் நிறையில் ஏற்படும் மாற்றம்

(a) நேர்க்குறி (b) எதிர்க்குறி (c) சுழி (d) இவற்றில் எதுவுமில்லை

23) ஒரு பொருளை வெப்பப்படுத்தும்போது அல்லது குளிர்விக்கும்போது ஏற்படும் நீள்வெப்ப விரிவு எந்த அச்சு வழியாக நடைபெறும்?

(a) X அல்லது –X (b) Y அல்லது –Y (c) (அ) மற்றும் (ஆ) (d) (அ) அல்லது (ஆ)

24) மூலக்கூறுகளின் சராசரி _____ வெப்பநிலை ஆகும்

(a) இயக்க ஆற்றல் மற்றும் நிலை ஆற்றலுக்கிடையே உள்ள வேறுபாடு

(b) இயக்க ஆற்றல் மற்றும் நிலை ஆற்றலின் கூடுதல்

(c) மொத்த ஆற்றல் மற்றும் நிலை ஆற்றலுக்கிடையேயான வேறுபாடு

(d) இயக்க ஆற்றல் மற்றும் மொத்த ஆற்றலுக்கிடையேயான வேறுபாடு

25) கொடுக்கப்பட்டுள்ள படத்தில் வெப்ப ஆற்றல் பரவும் திசைகள்



(a) A← B, A← C, B← C (b) A→ B, A→ C, B→ C (c) A→ B, A← C, B→ C

(d) A← B, A→ C, B← C

26) கீழ்கண்டவற்றுள் எது சரியானது?

(a) மின்னூட்டம் பாயும் வீதம் மின் திறன்

(b) மின்னூட்டம் பாயும் வீதம் மின்னோட்டம்

(c) மின்னாற்றல் மாறும் வீதம் மின்னோட்டம்

(d) மின்னோட்டம் மாறும் வீதம் மின்னூட்டம்

27) மின்தடையின் SI அலகு

இதன் விடைகள் விலை ரூ 150 மட்டும் WHATSAPP – 8056206308

(a) மோ (b) ஜூல் (c) ஓம் (d) ஓம் மீட்டர்

28) ஒரு எளிய மின்சுற்றில் சாவியை மூடியவுடன் மின்விளக்கு ஒளிர்வது ஏன்?

(a) சாவி மின்சாரத்தை தயாரிக்கிறது

(b) சாவி மூடியிருக்கும் போது மின்சுற்றின் சுற்றுப்பாதையை மூடி விடுகிறது.

(c) சாவி மூடியிருக்கும் போது மின்சுற்றின் சுற்றுப்பாதை திறக்கிறது

(d) மின்விளக்கு மின்னேற்றமடையும்

29) கிலோ வாட் மணி என்பது எதனுடைய அலகு?

(a) மின்தடை எண் (b) மின் கடத்து திறன் (c) மின் ஆற்றல் (d) மின் திறன்

30) ஒலி அலைகள் காற்றில் பரவும் போது அதன் துகள்கள்

(a) அலையின் திசையில் அதிர்வுறும்

(b) அதிர்வுறும், ஆனால் குறிப்பிட்டத் திசை இல்லை

(c) அலையின் திசைக்கு செங்குத்தாக அதிர்வுறும் (d) அதிர்வுறுவதில்லை.

31) வாயு ஊடகத்தில் ஒலியின் திசைவேகம் 330 மீவி$^{-1}$. வெப்பநிலை மாறிலியாக இருக்கும் போது, அதன் அழுத்தம் 4 மடங்கு உயர்த்தப்பட்டால், ஒலியின் திசைவேகம்

(a) 330 மீவி$^{-1}$ (b) 660 மீவி$^{-1}$ (c) 156 மீவி$^{-1}$ (d) 990 மீவி$^{-1}$

32) மனிதனால் உணரக்கூடிய செவியுணர் ஒலியின் அதிர்வெண்

(a) 50 kHz (b) 20 kHz (c) 15000 kHz (d) 10000 kHz

33) காற்றில் ஒலியின் திசைவேகம் 330 மீவி$^{-1}$ அதன் வெப்பநிலை இரட்டிப்பாக்கப்பட்டு, அழுத்தம் பாதியாகக் குறைக்கப்பட்டால் ஒலியின் திசைவேகம் காண்க.

(a) 330 மீவி$^{-1}$ (b) 165 மீவி$^{-1}$ (c) 330 x $\sqrt{2}$ மீவி$^{-1}$ (d) 320 x $\sqrt{2}$ மீவி$^{-1}$

34) 1.25 x 10^4 Hz அதிர்வெண் உடைய ஒலியானது 344 மீவி$^{-1}$ வேகத்தில் பரவுகிறது எனில், அதன் அலை நீளம்?

(a) 27.52 மீ (b) 275.2 மீ (c) 0.02752 மீ (d) 2.752 மீ

35) ஒரு ஒலி அலையானது எதிரொலிக்கப்பட்டு மீண்டும் அதே ஊடகத்தில் பரவும்போது, கீழ்கண்டவற்றுள் எது மாற்றமடையும்.

(a) வேகம் (b) அதிர்வெண் (c) அலைநீளம் (d) எதுவுமில்லை

36) ஒரு கோளின் வளிமண்டலத்தில் ஒலியின் திசைவேகம் 500 மீவி$^{-1}$ எனில் எதிரொலி கேட்க ஒலி மூலத்திற்கும், எதிரொலிக்கும் பரப்பிற்கும் இடையே தேவையான குறைந்தபட்சத் தொலைவு என்ன?

(a) 17 மீ (b) 20 மீ (c) 25 மீ (d) 50 மீ

37) ஒலி ஊடகத்தில் செல்லும் திசைவேகம் சார்ந்து கீழ்க்காணும ஊடகங்களை இறங்கு வரிசைப்படுத்துக.

இதன் விடைகள் விலை ரூ 150 மட்டும் WHATSAPP – 8056206308

(a) காற்று > கண்ணாடி > நீர் (b) நீர் > காற்று > கண்ணாடி

(c) கண்ணாடி < நீர் < காற்று (d) கண்ணாடி > நீர் > காற்று

38) ஒலி அலைகள் ..... திசைவேகத்தில் பரவும்.

(a) 340×10^{8} மீ / வி (b) 340 மீ / வி (c) 3×10^{8} மீ / வி (d) 340×10^{-8} மீ / வி

39) மனிதனால் உருவாக்கப்பட்ட கதிரியக்கம் _____ எனக் கருதப்படுகிறது.

(a) தூண்டப்பட்ட கதிரியக்கம் (b) தன்னிசையான கதிரியக்கம்

(c) செயற்கைக் கதிரியக்கம் (d) அ மற்றும் இ

40) கதிரியக்கத்தின் அழகு _____

(a) ராண்ட்ஜன் (b) கியூரி (c) பெக்கொரல் (d) இவை அனைத்தும்

41) செயற்கைக் கதிரியக்கத்தினைக் கண்டறிந்தவர்

(a) பெக்கொரல் (b) ஐரின் கியூரி (c) ராண்ட்ஜன் (d) நீல்ஸ் போர்

42) கீழ்கண்ட எந்த வினையில் சேய் உட்கருவின் நிறை எண் மாறாமல் இருக்கும்
(i) α - சிதைவு
(ii) β - சிதைவு
(iii) γ - சிதைவு
(iv) நியூட்ரான் சிதைவு

(a) (i) மட்டும் சரி (b) (ii) மற்றும் (iii) சரி (c) (i) மற்றும் (iv) சரி

(d) (ii) மற்றும் (iv) சரி

43) புற்றுநோய் சிகிச்சையில் பயன்படும் கதிரியக்க ஐசோடோப்பு _____

(a) ரேடியோ அயோடின் (b) ரேடியோ கார்பன் (c) ரேடியோ கோபால்ட்

(d) ரேடியோ நிக்கல்

44) காமாக் கதிர்கள் அபாயகரமானது காரணம் அவை

(a) கண்கள் மற்றும் எலும்புகளைப் பாதிக்கும் (b) திசுக்களைப் பாதிக்கும்

(c) மரபியல் குறைப்பாடுகளை உண்டாக்கும்

(d) அதிகமான வெப்பத்தை உருவாக்கும்

45) காமாக் கதிரியக்கத்திலிருந்து நம்மைப் பாதுகாக்க _____ உறைகள் பயன்படுகின்றன.

(a) காரீய ஆக்சைடு (b) இரும்பு (c) காரீயம் (d) அலுமினியம்

46) கீழ்கண்ட எந்தக் கூற்று. கூற்றுகள் சரியானவை?
(i) α துகள்கள் என்பவை ஃபோட்டான்கள்
(ii) காமாக் கதிரியக்கத்தின் ஊடுருவுத் திறன் குறைவு
(iii) α துகள்களின் அயனியாக்கும் திறன் அதிகம்
(iv) காமாக் கதிர்களின் ஊடுருவுத்திறன் அதிகம்

இதன் விடைகள் விலை ரூ 150 மட்டும் WHATSAPP – 8056206308

(a) (i) மற்றும் (ii) சரி (b) (ii) மற்றும் (iii) சரி (c) (iv) மட்டும் சரி

(d) (iii) மற்றும் (iv) சரி

47) புரோட்டான் - புரோட்டான் தொடர்வினைக்கு எடுத்துக்காட்டு

(a) அணுக்கரு பிளவு (b) ஆல்பாச் சிதைவு (c) அணுக்கரு இணைவு

(d) பீட்டாச் சிதைவு

48) [illegible] எனில் A மற்றும் Z ன் மதிப்பு

(a) 8, 6 (b) 8, 4 (c) 4, 8 (d) கொடுக்கப்பட்ட தரவுகளிலிருந்து காண இயலாது

49) காமினி அணுக்கரு உலை அமைந்துள்ள இடம்

(a) கல்பாக்கம் (b) கூடங்குளம் (c) மும்பை (d) இராஜஸ்தான்

50) கீழ்கண்ட எந்தக் கூற்று / கூற்றுகள் சரியானவை?
(i) அணுக்கரு உலை மற்றும் அணுகுண்டு ஆகியவற்றில் தொடர் வினை நிகழும்
(ii) அணுக்கரு உலையில் கட்டுப்படுத்தப்பட்ட தொடர்வினை நிகழும்
(iii) அணுக்கரு உலையில் கட்டுப்படுத்தப்படாத தொடர்வினை நிகழும்
(iv) அணுகுண்டு வெடித்தலில் தொடர்வினை நிகழாது

(a) (i) மட்டும் சரி (b) (i) மற்றும் (ii) சரி (c) (iv) மட்டும் சரி

(d) (iii) மற்றும் (iv) சரி

51) அணு எண்..... தனிமங்கள் தன்னிச்சையான கதிரியக்கங்களை வெளியிடும்

(a) 83ஐ விட அதிகமான (b) 83ஐ விட குறைவான (c) 73ஐ விடக் குறைவான

(d) 83ஐ கொண்ட

52) பீட்டா சிதைவின் போது .....

(a) நியூட்ரான்களின் எண்ணிக்கையில் ஒன்று குறையும்

(b) அணு எண்ணில் ஒன்று குறையும்

(c) புரோட்டான்களின் எண்ணிக்கையில் ஒன்று குறையும்

(d) நியூட்ரான்களின் எண்ணிக்கையில் ஒன்று அதிகரிக்கும்

53) தன்னிச்சையாக கதிரியக்கங்களை வெளியிடும் திறன் பெற்ற தனிமம்

(a) Ni (b) Pd (c) Pt (d) U

54) கீழ்கண்டவற்றுள் எது குறைந்த நிறையைக் கொண்டது

(a) 6.023×10^{23} ஹீலியம் அணுக்கள் (b) 1 ஹீலியம் அணு (c) 2 கி ஹீலியம்

(d) 1 மோல் ஹீலியம் அணு

55) கீழ்க்கண்டவற்றுள் எது மூவணு மூலக்கூறு?

இதன் விடைகள் விலை ரூ 150 மட்டும் WHATSAPP – 8056206308

(a) குளுக்கோஸ் (b) ஹீலியம் (c) கார்பன் டை ஆக்சைடு (d) ஹைட்ரஜன்

56) திட்ட வெப்ப அழுத்த நிலையில் 4.4 கி CO_2 ன் பருமன்

(a) 22.4 லிட்டர் (b) 2.24 லிட்டர் (c) 0.24 லிட்டர் (d) 0.1 லிட்டர்

57) 1 மோல் நைட்ரஜன் அனுவின் நிறை

(a) 28 amu (b) 14 amu (c) 28 கி (d) 14 கி

58) 1 amu என்பது

(a) C - 12 ன் அணுநிறை (b) ஹைட்ரஜனின் அணுநிறை

(c) ஒரு C - 12 ன் அணுநிறையில் 1/12 பங்கின் நிறை (d) O - 16 ன் அணு நிறை

59) கீழ்கணடவற்றுள் தவறான கூற்று எது.

(a) ஒரு கிராம் C - 12 வானது அவகாட்ரோ எண்ணிக்கையிலான அணுக்களைக் கொண்டது.

(b) ஒரு மோல் ஹைட்ரஜன் வாயுவானது அவகாட்ரோ எண்ணிக்கையிலான மூலக்கூறுகளைக் கொண்டது.

(c) ஒரு மோல் ஹைட்ரஜன் வாயுவானது அவகாட்ரோ எண்ணிக்கையிலான அணுக்களைக் கொண்டது.

(d) ஒரு மோல் எலக்ட்ரான் என்பது 6.023×10^{23} எலக்ட்ரான்களைக் குறிக்கிறது

60) திட்ட வெப்ப அழுத்த நிலையில் 1 மோல் ஈரணு மூலக்கூறு வாயுவின் பருமன்

(a) 11.2 லிட்டர் (b) 5.6 லிட்டர் (c) 22.4 லிட்டர் (d) 44.8 லிட்டர்

61) $_{20}Ca^{40}$ தனிமத்தின் உட்கருவில்

(a) 20 புரோட்டான் 40 நியூட்ரான் (b) 20 புரோட்டான் 20 நியூட்ரான்

(c) 20 புரோட்டான் 40 எலக்ட்ரான் (d) 20 புரோட்டான் 20 எலக்ட்ரான்

62) ஆக்சிஜனின் கிராம் மூலக்கூறு நிறை

(a) 16 கி. (b) 18 கி. (c) 32 கி. (d) 17 கி.

63) 1 மோல் எந்த ஒரு பொருளும் _____ மூலக்கூறுகளைக் கொண்டிருக்கும்.

(a) 6.023×10^{23} (b) 6.023×10^{-23} (c) 3.0115×10^{23} (d) 12.046×10^{23}

64) ஆவர்த்தன அட்டவணையில் உள்ள தொடர்கள் மற்றும் தொகுதிகள் எண்ணிக்கை _____

(a) 6,16 (b) 7,17 (c) 8,18 (d) 7,18

65) நவீன ஆவர்த்தன விதியின் அடிப்படை _____

(a) அணு எண் (b) அணு நிறை (c) ஐசோடோப்பின் நிறை

(d) நியுட்ரானின் எண்ணிக்கை

66) ஹேலஜன் குடும்பம் எந்த தொகுதியைச் சேர்ந்தது

இதன் விடைகள் விலை ரூ 150 மட்டும் WHATSAPP – 8056206308

(a) 17வது (b) 15வது (c) 18வது (d) 16வது

67) _____ என்பது ஒப்பிட்டு ஆவர்த்தன பண்பு

(a) அணு ஆரம் (b) அயனி ஆரம் (c) எலக்ட்ரான் கவர்தன்மை

(d) எலக்ட்ரான் நாட்டம்

68) துருவின் வாய்ப்பாடு _____

(a) $FeO.xH_2O$ (b) $FeO_4.\times H_2O$ (c) $Fe_2O_3.xH_2O$ (d) FeO

69) அலுமினோ வெப்ப வினையில், அலுமினியத்தின் பங்கு

(a) ஆக்ஸிஜனேற்றி (b) ஆக்ஸிஜன் ஒடுக்கி (c) ஹைட்ரஜனேற்றி

(d) சல்பர் ஏற்றி

70) மெல்லிய படலமாக துத்தநாக படிவை, பிற உலோகத்தின் மீது ஏற்படுத்தும் நிகழ்வு_____ எனப்படும்.

(a) வர்ணம் பூசுதல் (b) நாகமுலாமிடல் (c) மின்முலாம் பூசுதல்

(d) மெல்லியதாக்கல்

71) கீழ்க்கண்ட மந்த வாயுக்களில், எது வெளிப்புற ஆற்றல் மட்டத்தில் இரண்டு எலக்ட்ரான்களைக் கொண்டது.

(a) He (b) Ne (c) Ar (d) Kr

72) நியான் வாயுவின் எலக்ட்ரான் நாட்டம் பூஜ்ஜியம் ஆக காரணம் _____

(a) நியுட்ரானின் உறுதியான வரிசை அமைப்பு

(b) எலக்ட்ரானின் உறுதியான கட்டமைப்பு (c) குறைந்த உருவளவு

(d) அதிக அடர்த்தி

73) இரசக்கலவை உருவாக்கலில் தேவைப்படும் முக்கியமான உலோகம்

(a) Ag (b) Hg (c) Mg (d) AI

74) நீரில் கரைக்கப்பட்ட உப்புக் கரைசல் என்பது _____ கலவை.

(a) ஒருபடித்தான (b) பலபடித்தான (c) ஒருபடித்தான மற்றும் பல்படித்தானவை

(d) ஒருபடித்தானவை அல்லாதவை

75) இருமடிக்கரைசலில் உள்ள கூறுகளின் எண்ணிக்கை _____

(a) 2 (b) 3 (c) 4 (d) 5

76) கீழ்கண்டவற்றுள் எது சர்வக்கரைப்பான் எனப்படுவது _____

(a) அசிட்டோன் (b) பென்சீன் (c) நீர் (d) ஆல்கஹால்

77) குறிப்பிட்ட வெப்பநிலையில், குறிப்பிட்ட அளவு கரைப்பானில் மேலும் கரைபொருளை கரைக்க முடியாத கரைசல் _____ எனப்படும்.

இதன் விடைகள் விலை ரூ 150 மட்டும் WHATSAPP – 8056206308

(a) தெவிட்டிய கரைசல் (b) தெவிட்டாத கரைசல் (c) அதி தெவிட்டிய கரைசல்

(d) நீர்த்த கரைசல்

78) நீரற்ற கரைசலை அடையாளம் காண்க

(a) நீரின் கரைக்கப்பட்ட உப்பு (b) நீரில் கரைக்கப்பட்ட குளுக்கோஸ்

(c) நீரில் கரைக்கப்பட்ட காப்பர் சல்பேட்

(d) கார்பன் - டை - சல்பைடில் கரைக்கப்பட்ட சல்பர்

79) குறிப்பிட்ட வெப்பநிலையில், அழுத்தத்தை அதிகரிக்கும் போது நீர்மத்தில் வாயுவின் கரைத்திறன் _____

(a) மாற்றமில்லை (b) அதிகரிக்கிறது (c) குறைகிறது (d) வினை இல்லை

80) 100 கி நீரில் சோடியம் குளோரைடின் கரைத்திறன் 36 கி. 25 சோடியம் குளோரைடு 100 மி.லி நீரில் கரைத்த பிறகு மேலும் எவ்வளவு உப்பை சேர்த்தால் தெவிட்டிய கரைசல் உருவாகும் _____

(a) 12 கி (b) 11 கி (c) 16 கி (d) 20 கி

81) 25 % ஆல்கஹால் கரைசல் என்பது _____

(a) 100 மி.லி நீரில் 25 மி.லி ஆல்கஹால் (b) 25 மி.லி நீரில் 25 மி.லி ஆல்கஹால்

(c) 75 மி.லி நீரில் 25 மி.லி ஆல்கஹால் (d) 25 மி.லி நீரில் 75 மி.லி ஆல்கஹால்

82) ஈரம் உறிஞ்சிக் கரையும் சேர்மங்கள் உருவாகக் காரணம் _____

(a) ஈரம் மீது அதிக நாட்டம் (b) ஈரம் மீது குறைந்த நாட்டம்

(c) ஈரம் மீது நாட்டம் இன்மை (d) ஈரம் மீது மந்தத்தன்மை

83) கீழ்கண்டவற்றுள் எது நீர் உறிஞ்சும் தன்மையுடையது _____

(a) ஃபெரிக் குளோரைடு (b) காப்பர் சல்பேட் பென்டாஹைட்ரேட்

(c) சிலிக்கா ஜெல் (d) இவற்றுள் எதுமில்லை

84) கரைசல்களின் கன அளவு சதவீதம் வெப்பநிலை அதிகரிக்கும்போது குறைவதற்கான காரணம்.

(a) திரவங்களின் வெப்ப விரிவு (b) திரவங்களின் குளிர்வு விளைவு

(c) கரைசலின் செறிவு அதிகமாதல் (d) கரைசலின் செறிவு குறைதல்

85) 25 விழுக்காடு (25%) எத்தனால் கரைசல் என்பது.....

(a) 25 மி.லி எத்தனால் 100 மி.லி நீரில் உள்ளது

(b) 25 மி.லி எத்தனால் 25 மி.லி நீரில் உள்ளது

(c) 25 மி.லி எத்தனால் 75 மி.லி நீரில் உள்ளது

(d) 75 மி.லி எத்தனால் 25 மி.லி நீரில் உள்ளது

86) $H_{2(g)} + Cl_{2(g)} \rightarrow 2HCl_{(g)}$ என்பது

இதன் விடைகள் விலை ரூ 150 மட்டும் WHATSAPP – 8056206308

(a) சிதைவுறுதல் வினை (b) சேர்க்கை வினை (c) ஒற்றை இடப்பெயர்ச்சி வினை

(d) இரட்டை இடப்பெயர்ச்சி வினை

87) ஒளிச்சிதைவு என்பது இதனால் நடைபெறும் சிதைவு வினையாகும்.

(a) வெப்பம் (b) மின்னாற்றல் (c) ஒளி (d) எந்திர ஆற்றல்

88) கார்பன் மற்றும் ஆக்சிஜன் இடையேயான ஒரு வினை பின்வருமாறு குறிக்கப்படுகிறது

$C_{(s)} + O_{2(g)} \rightarrow CO_{2(g)}$

இது எவ்வகை வினையாக வகைப்படுத்தப்படுகிறது.

(i) சேர்க்கை வினை
(ii) எரிதல் வினை
(iii) சிதைவுறுதல் வினை
(iv) மீளா வினை

(a) (i) மற்றும் (ii) (b) (i) மற்றும் (iv) (c) (i), (ii) மற்றும் (iii) (d) (i), (ii) மற்றும் (iv)

89) $Na_2SO_{4(aq)} + BaCl_{2(aq)} \rightarrow BaSO_{4(s)} \downarrow + 2\ NaCl_{(aq)}$ என்ற வேதிச்சமன்பாடு பின்வருனவற்றுள் எவ்வகை வினையைக் குறிக்கிறது.

(a) நடுநிலையாக்கல் வினை (b) எரிதல் வினை (c) வீழ்படிவாதல் வினை

(d) ஒற்றை இடப்பெயர்ச்சி வினை

90) வேதிச் சமநிலை பற்றிய பின்வரும் கூற்றுகளில் எவை சரியானவை?

(i) இயக்கத்தன்மை உடையது.
(ii) சமநிலையில் முன்னோக்கு மற்றும் பின்னோக்கு வினைகளில் வினைவேகம் சமம்.
(iii) மீளா வினைகள் வேதிச் சமநிலையை அடைவதில்லை.
(iv) வினைபடு பொருள் மற்றும் வினைவிளை பொருள்களில் செறிவு வேறுபடலாம்.

(a) (i), (ii) மற்றும் (iii) (b) (i), (ii) மற்றும் (iv) (c) (ii), (iii) மற்றும் (iv)

(d) (i), (iii) மற்றும் (iv)

91) $X_{(S)} + 2HCl_{(aq)} \rightarrow XCl_{2(aq)} + H_{2(g)}$ என்ற ஒற்றை இடப்பெயர்ச்சி வினையில் X என்பது பின்வருவனவற்றுள் எதைக் குறிக்கிறது.

(i) Zn
(ii) Ag
(iii) Cu
(iv) Mg

சரியான இணையைத் தேர்ந்தெடு.

(a) (i) மற்றும் (ii) (b) (ii) மற்றும் (iii) (c) (iii) மற்றும் (iv) (d) (i) மற்றும் (iv)

92) பின்வருவனவற்றுள் எது “தனிமம் + தனிமம் → சேர்மம்" வகை அல்ல.

(a) $C_{(s)} + O_{2(g)} \rightarrow Co_{2(g)}$ (b) $2K_{(s)} + Br_{2(l)} \rightarrow 2KBr_{(s)}$ (c) $2CO_{(g)} + O_{2(g)} \rightarrow 2CO_{2(g)}$

(d) $4Fe_{(s)} + 3O_{2(g)} \rightarrow 2Fe_2O_{3(s)}$

93) பின்வருவனவற்றுள் எது வீழ்படிவாதல் வினையை குறிக்கிறது.

இதன் விடைகள் விலை ரூ 150 மட்டும் WHATSAPP – 8056206308

(a) $A_{(s)} + B_{(s)} \rightarrow C_{(s)} + D_{(s)}$ (b) $A_{(s)} + B_{(aq)} \rightarrow C_{(aq)} + D_{(l)}$ (c) $A_{(aq)} + B_{(aq)} \rightarrow C_{(s)} + D_{(aq)}$

(d) $A_{(aq)} + B_{(s)} \rightarrow C_{(aq)} + D_{(l)}$

94) ஒரு கரைசலின் pH மதிப்பு 3 எனில், அதன் (OH-) ஹைடிராக்சைடு அயனி செறிவு என்ன?

(a) 1×10^{-3} M (b) 3 M (c) 1×10^{-11} M (d) 11 M

95) தூளாக்கப்பட்ட $CaCO_3$; கட்டியான $CaCO_3$ விட தீவிரமாக வினைபுரிகிறது. காரணம்

(a) அதிக புறப்பரப்பளவு (b) அதிக அழுத்தம் (c) அதிக செறிவினால்

(d) அதிக வெப்பநிலை

96) ஓர் எரிதல் வினையில் ..... பயன்படுத்தப்படுகிறது.

(a) ஆக்ஸிஜன் வாயு வெளியிடப்படுகிறது

(b) நைட்ரஜன் வாயு வெளியிடப்படுகிறது

(c) ஆக்ஸிஜன் வாயு பயன்படுத்தப்படுகிறது

(d) நைட்ரஜன் வாயு பயன்படுத்தப்படுகிறது

97) ஒரு மீள் வினையில் உருவாகும் விளைபொருளை குறிப்பிட்ட கால இடைவெளிகளில் நீக்கும் பொழுது விளைபொருள் உருவாகும் அளவு .....

(a) அதிகரிக்கிறது (b) குறைகிறது (c) முதலில் குறைந்து பின் அதிகரிக்கிறது

(d) முதலில் அதிகரித்து பின் குறைகிறது

98) ஒரு வேதிச்சமநிலையில் வினைபடு, வினைவிளை பொருட்களின் செறிவுகள்.....

(a) வேறுபட்டு இருக்கின்றன (b) ஒரே மாதிரியாக இருக்கின்றன

(c) கணிக்க முடியாதவை (d) சமமாக இராது

99) ஒரு திறந்த சங்கிலித் தொடர் கரிம சேர்மத்தின் மூலக்கூறு வாய்ப்பாடு C_3H_6 அந்த சேர்மத்தின் வகை

(a) அல்கேன் (b) அல்கீன் (c) அல்கைன் (d) ஆல்கஹால்

100) ஒரு கரிம சேர்மத்தின் IUPAC பெயர் 3-மெத்தில்பியூட்டன் - 1 – ஆல் இது எந்த வகைச் சேர்மம்

(a) ஆல்டிஹைடு (b) கார்பாசிலிக் அமிலம் (c) கீட்டோன் (d) ஆல்கஹால்

101) IUPAC பெயரிடுதலின்படி ஆல்டிஹைடுக்காக சேர்க்கப்படும் இரண்டாம் நிலை முன்னொட்டு_____

(a) ஆல் (b) ஆயிக் அமிலம் (c) ஏல் (d) அல்

102) பின்வரும் படி வரிசை சேர்மங்களில், தொடர்ச்சியாக வரும் இணை எது?

இதன் விடைகள் விலை ரூ 150 மட்டும் WHATSAPP – 8056206308

(a) C_3H_8 and C_4H_{10} (b) C_2H_2 and C_2H_4 (c) CH_4 and C_3H_6 (d) C_2H_5OH and C_4H_8OH

103) $C_2H_5OH + 3\ O_2 \rightarrow 2\ CO_2 + 3\ H_2O$ என்பது

(a) எத்தனால் ஒடுக்கம் (b) எத்தனால் எரிதல்

(c) எத்தனாயிக் அமிலம் ஆக்சிஜனேற்றம் (d) எத்தனேல் ஆக்சிஜனேற்றம்

104) எரி சாராயம் என்பது ஒரு நீர்ம கரைசல். இதிலுள்ள எத்தனாலின் சதவீதம்_____

(a) 95.5 % (b) 75.5 % (c) 55.5 % (d) 45.5 %

105) கீழ்கண்டவற்றுள் எது மயக்கமூட்டியாக பயன்படுகிறது.

(a) கார்பாக்சிலிக் அமிலம் (b) ஈதர் (c) எஸ்டர் (d) ஆல்டிஹைடு

106) TFM என்பது சோப்பின் எந்த பகுதிப் பொருளைக் குறிக்கிறது.

(a) தாது உப்பு (b) வைட்டமின் (c) கொழுப்பு அமிலம் (d) கார்போஹைட்ரேட்

107) கீழ்கண்டவற்றுள் டிடர்ஜெண்ட்டை பற்றி தவறான கூற்று எது?

(a) நீண்ட சங்கிலி அமைப்பை பெற்ற கொழுப்பு அமிலத்தின் சோடிய உப்பு

(b) சல்போனிக் அமிலத்தின் சோடியம் உப்பு

(c) டிடர்ஜெண்ட்டின் அயனி பகுதி SO_3- Na+

(d) கடின நீரிலும் சிறப்பாக செயல்படும்.

108) காஸ்பேரியன் பட்டைகள் வேரின் _____பகுதியில் காணப்படுகிறது

(a) புறணி (b) பித் (c) பெரிசைக்கிள் (d) அகத்தோல்

109) உள்நோக்கிய சைலம் என்பது எதன் சிறப்புப் பண்பாகும்?

(a) வேர் (b) தண்டு (c) இலைகள் (d) மலர்கள்

110) சைலமும் புளோயமும் ஒரே ஆரத்தில் அருகருகே அமைந்து காணப்படுவது _____ எனப்படும்.

(a) ஆரப்போக்கு அமைப்பு (b) சைலம் சூழ் வாஸ்குலார் கற்றை

(c) ஒன்றிணைந்தவை (d) இவற்றில் எதுவுமில்லை

111) காற்றில்லா சுவாசத்தின் மூலம் உருவாவது

(a) கார்போஹைட்ரேட் (b) எத்தில் ஆல்கஹால் (c) அசிட்டைல் கோ.ஏ

(d) பைருவேட்

112) கிரப் சுழற்சி இங்கு நடைபெறுகிறது.

(a) பசுங்கணிகம் (b) மைட்டோகாண்ட்ரியாவின் உட்கூழ்ம மேட்ரிக்ஸ்

(c) புறத்தோல் துளை (d) மைட்டோ காண்ட்ரியாவின் உட்புறச்சவ்வு

113) ஒளிச்சேர்க்கையின் போது எந்த நிலையில்ஆக்ஸிஜன் உற்பத்தியாகிறது?

இதன் விடைகள் விலை ரூ 150 மட்டும் WHATSAPP – 8056206308

(a) ATP யானது ADP யாக மாறும் போது (b) CO_2 நிலை நிறுத்தப்படும் போது

(c) நீர் மூலக்கூறுகள் பிளக்கப்படும் போது (d) இவை அனைத்திலும்

114) அட்டையின் இடப்பெயர்ச்சி _____ மூலம் நடைபெறுகிறது.

(a) முன் ஒட்டுறுப்பு (b) பக்க கால்கள் (c) சீட்டாக்கள்

(d) தசைகளின் சுருக்கம் மற்றும் நீள்தல்

115) அட்டையின் உடற்கண்டங்கள் இவ்வாறு அழைக்கப்படுகின்றன

(a) மெட்டாமியர்கள் (சோமைட்டுகள்) (b) புரோகிளாட்டிடுகள் (c) ஸ்ட்ரோபிலா

(d) இவை அனைத்தும்

116) அட்டையின் தொண்டைப்புற நரம்புத்திரள் எந்த உறுப்பு மண்டலத்தின் ஒரு பகுதி

(a) கழிவுநீக்க மண்டலம் (b) நரம்பு மண்டலம் (c) இனப்பெருக்க மண்டலம்

(d) சுவாச மண்டலம்

117) அட்டையின் மூளை இதற்கு மேலே உள்ளது

(a) வாய் (b) வாய்க்குழி (c) தொண்டை (d) தீனிப்பை

118) அட்டையின் உடலில் உள்ள கண்டங்களின் எண்ணிக்கை

(a) 23 (b) 33 (c) 38 (d) 30

119) பாலூட்டிகள் _____ விலங்குகள்

(a) குளிர் இரத்த (b) வெப்ப இரத்த (c) பாய்கிலோதெர்மிக்

(d) இவை அனைத்தும்

120) இளம் உயிரிகளைப் பிரசவிக்கும் விலங்குகள்

(a) ஓவிபேரஸ் (b) விவிபேரஸ் (c) ஓவோவிவிபேரஸ் (d) அனைத்தும்

121) ஆற்றல் சார்ந்த கடத்துதலில் (செயல்மிகு கடத்துதல்) _____

(a) மூலக்கூறுகள் செறிவு குறைவான பகுதியிலிருந்து செறிவு அதிகமான பகுதிக்கு இடம் பெயர்கிறது

(b) ஆற்றல் செலவிடப்படுகிறது

(c) அவை மேல் நோக்கி கடத்துத்தல் முறையாகும் (d) இவை அனைத்தும்

122) வேரின் மூலம் உறிஞ்சப்பட்ட நீரானது தாவரத்தின் மேற்பகுதிக்கு இதன் மூலம் கடத்தப்படுகிறது

(a) புறணி (b) புறத்தோல் (c) புளோயம் (d) சைலம்

123) நீராவிப்போக்கின் பொழுது வெளியேற்றப்படுவது

(a) கார்பன்டை ஆக்ஸைடு (b) ஆக்ஸிஜன் (c) நீர் (d) இவை ஏதுவுமில்லை

124) வேர்த் தூவிகளானது ஒரு

இதன் விடைகள் விலை ரூ 150 மட்டும் WHATSAPP – 8056206308

(a) புறணி செல்லாகும் (b) புறத்தோலின் நீட்சியாகும்

(c) ஒரு செல் அமைப்பாகும் (d) ஆ மற்றும் இ

125) கீழ்கண்ட எந்த நிகழ்ச்சிக்கு ஆற்றல் தேவை

(a) செயல் மிகு கடத்துதல் (ஆற்றல் சார் கடத்துதல்) (b) பரவல் (c) சவ்வூடு பரவல்

(d) இவை அனைத்தும்

126) மனித இதயத்தின் சுவர் எதனால் ஆனது?

(a) எண்டோகார்டியம் (b) எபிகார்டியம் (c) மையோகார்டியம்

(d) மேற்கூறியவை அனைத்தும்

127) இரத்த ஓட்டத்தின் சரியான வரிசை எது?

(a) வெண்ட்ரிக்கிள் → ஏட்ரியம் → சிரை → தமனி

(b) ஏட்ரியம் → வெண்ட்ரிக்கிள் → சிரை → தமனி

(c) ஏட்ரியம் → வெண்ட்ரிக்கிள் → தமனி → சிரை

(d) வெண்ட்ரிக்கிள் -→ சிரை → ஏட்ரியம் → தமனி

128) விபத்து காரணமாக 'O' இரத்த வகையைச் சார்ந்த ஒருவருக்கு அதிக இரத்த இழப்பு ஏற்படுகிறது. இந்நிலையில் அவருக்கு எந்த இரத்த வகையை மருத்துவர் செலுத்துவார்?

(a) 'O' வகை (b) 'AB' வகை (c) A அல்லது B வகை (d) அனைத்து வகை

129) இதயத்தின் இதயம் என அழைக்கப்படுவது ____

(a) SA கணு (b) AV கணு (c) பர்கின்ஜி இழைகள் (d) ஹிஸ் கற்றைகள்

130) பின்வருவனவற்றுள் இரத்தத்தின் இயைபு தொடர்பாக சரியானது எது?

(a) பிளாஸ்மா = இரத்தம் + லிம்ஃபோசைட் (b) சீரம் = இரத்தம் + ஃபைப்ரினோஜன்

(c) நிணநீர் = பிளாஸ்மா + RBC + WBC

(d) இரத்தம் = பிளாஸ்மா + RBC + WBC + இரத்ததட்டுகள்

131) இருமுனை நியூரான்கள் காணப்படும் இடம்

(a) கண் விழித்திரை (b) பெருமூளைப் புறணி (c) வளர் கரு

(d) சுவாச எபிதீலியம்

132) பார்த்தல், கேட்டல், நினைவுத்திறன், பேசுதல், அறிவுக்கூர்மை மற்றும் சிந்தித்தல் ஆகிய செயல்களுக்கான இடத்தைக் கொண்டது.

(a) சிறுநீரகம் (b) காது (c) மூளை (d) நுரையீரல்

133) அனிச்சைச் செயலின் போது அனிச்சை வில்லை உருவாக்குபவை

இதன் விடைகள் விலை ரூ 150 மட்டும் WHATSAPP – 8056206308

(a) மூளை, தண்டு வடம், தசைகள் (b) உணர்வேற்பி, தசைகள், தண்டுவடம்

(c) தசைகள், உணர்வேற்பி, மூளை (d) உணர்வேற்பி, தண்டுவடம், தசைகள்

134) டென்ட்ரான்கள் செல் உடலத்தை _____ தூண்டலையும், ஆக்சான்கள் செல் உடலத்திலிருந்து _____ தூண்டலையும் கடத்துகின்றன.

(a) வெளியே / வெளியே (b) நோக்கி / வெளியே (c) நோக்கி / நோக்கி

(d) வெளியே / நோக்கி

135) மூளை உறைகளுள் வெளிப்புறமாக காணப்படும் உறையின் பெயர்

(a) அரக்னாய்டு சவ்வு (b) பையா மேட்டர் (c) டியூரா மேட்டர்

(d) மையலின் உறை

136) _____ இணை மூளை நரம்புகளும் _____ இணை தண்டுவட நரம்புகளும் காணப்படுகின்றன.

(a) 12, 31 (b) 31, 12 (c) 12, 13 (d) 12, 21

137) மைய நரம்பு மண்டலத்திலிருந்து, தசை நார்களுக்குத் தூண்டல்களை கடத்தும் நியூரான்கள்

(a) உட் செல் நியூரான்கள் (b) கடத்து நரம்பு செல்கள்

(c) வெளிச்செல் நரம்பு செல்கள் (d) ஒரு முனை நியூரான்கள்

138) மூளையின் இரு புற பக்கவாட்டு கதுப்புகளையும் இணைக்கும் நரம்புப்பகுதி எது?

(a) தலாமஸ் (b) ஹைபோதலாமஸ் (c) பான்ஸ் (d) கார்பஸ் கலோசம்

139) ரேன்வீர் கணுக்கள் காணப்படும் இடம்

(a) தசைகள் (b) ஆக்சான்கள் (c) டெண்ட்ரைட்டுகள் (d) சைட்டான்

140) வாந்தியெடுத்தலைக் கட்டுப்படுத்தும் மையம்

(a) முகுளம் (b) வயிறு (c) மூளை (d) ஹைப்போதலாமஸ்

141) கீழுள்ளவற்றுள் நரம்புச் செல்களில் காணப்படாதது

(a) நியூரிலெம்மா (b) சார்கோலெம்மா (c) ஆக்ஸான் (d) டெண்டிரான்கள்

142) ஒருவர் விபத்தின் காரணமாக உடல் வெப்பநிலை, நீர்ச்சமநிலை மற்றும் பசி எடுத்தல் ஆகியவற்றுக்கான கட்டுப்பாட்டினை இழந்திருக்கிறார். அவருக்கு கீழுள்ளவற்றுள் மூளையின் எப்பகுதி பாதிப்படைந்ததால் இந்நிலை ஏற்பட்டுள்ளது?

(a) முகுளம் (b) பெருமூளை (c) பான்ஸ் (d) ஹைபோதலாமஸ்

143) ஜிப்ரல்லின்களின் முக்கிய விளைவு _____

(a) மரபியல் ரீதியான நெட்டைத் தாவரங்களைக் குட்டையாக்குவது

(b) குட்டைத் தாவரங்களை நீட்சி அடையச் செய்வது

இதன் விடைகள் விலை ரூ 150 மட்டும் WHATSAPP – 8056206308

(c) வேர் உருவாதலை ஊக்குவிப்பது (d) இளம் இலைகள் மஞ்சளாவது

144) நுனி ஆதிக்கத்தின் மீது நேர் விளைவை உருவாக்கும் ஹார்மோன்

(a) சைட்டோகைனின் (b) ஆக்சின் (c) ஜிப்ரல்லின் (d) எத்திலின்

145) பின்வருவனவற்றுள் எந்த ஹார்மோன் இயற்கையாக தாவரங்களில் காணப்படவில்லை?

(a) 2, 4 D (b) GA 3 (c) ஜிப்ரல்லின் (d) IAA

146) அவினா முளைக்குருத்து உறை ஆய்வு _____ என்பவரால் மேற்கொள்ளப்பட்டது.

(a) டார்வின் (b) N ஸ்மித் (c) பால் (d) F.W வெண்ட்

147) கரும்பில் உற்பத்தியாகும் சர்க்கரையின் அளவை அதிகரிக்க அவற்றின் மீது _____தெளிக்கப்படுகிறது.

(a) ஆக்சின் (b) சைட்டோகைனின் (c) ஜிப்ரல்லின்கள் (d) எத்திலின்

148) LH ஐ சுரப்பது _____.

(a) அட்ரினல் சுரப்பி (b) தைராய்டு சுரப்பி (c) பிட்யூட்டரியின் முன் கதுப்பு

(d) ஹைபோ தலாமஸ்

149) கீழுள்ளவற்றுள் நாளமுள்ளச் சுரப்பியை அடையாளம் காணவும்.

(a) பிட்யூட்டரி சுரப்பி (b) அட்ரினல் சுரப்பி (c) உமிழ் நீர் சுரப்பி

(d) தைராய்டு சுரப்பி

150) கீழுள்ளவற்றுள் எது நாளமுள்ளச் சுரப்பியாகவும், நாளமில்லாச் சுரப்பியாகவும் செயல்படுகிறது?

(a) கணையம் (b) சிறுநீரகம் (c) கல்லிரல் (d) நுரையீரல்

151) கீழுகண்டவற்றுள் தலைமைச் சுரப்பி என கருதப்படுவது எது?

(a) பினியல் சுரப்பி (b) பிட்யூட்டரி சுரப்பி (c) தைராய்டு சுரப்பி

(d) அட்ரினல் சுரப்பி

152) இலைகள் மூலம் இனப்பெருக்கம் செய்யும் தாவரம் _____

(a) வெங்காயம் (b) வேம்பு (c) இஞ்சி (d) பிரையோஃபில்லம்

153) பாலிலா இனப்பெருக்க முறையான மொட்டு விடுதல் மூலம் இனப்பெருக்கம் செய்யும் உயிரினம் _____

(a) அமீபா (b) ஈஸ்ட் (c) பிளாஸ்மோடியம் (d) பாக்டீரியா

154) சின்கேமியின் விளைவால் உருவாவது _____

இதன் விடைகள் விலை ரூ 150 மட்டும் WHATSAPP – 8056206308

(a) சூஸ்போர்கள் (b) கொனிடியா (c) சைகோட்(கருமுட்டை)

(d) கிளாமிடோஸ்போர்கள்

155) மலரின் இன்றியமையாத பாகங்கள்

(a) புல்லிவட்டம், அல்லிவட்டம் (b) புல்லிவட்டம், மகரந்தத்தாள் வட்டம்

(c) அல்லிவட்டம், சூலக வட்டம் (d) மகரந்தத்தாள் வட்டம், சூலக வட்டம்

156) காற்றின் மூலம் மகரந்தச்சேர்க்கை நடைபெறும் மலர்களில் காணப்படும் பண்புகள்.

(a) காம்பற்ற சூல்முடி (b) சிறிய மென்மையான சூல்முடி (c) வண்ண மலர்கள்

(d) பெரிய இறகு போன்ற சூல்முடி

157) மூடிய விதையுடைய தாவரங்களில் (ஆஞ்சியோஸ்பெர்ம்கள்) ஆண் கேமீட் எவ்வகை செல்லிலிருந்து உருவாகிறது ?

(a) உற்பத்தி செல் (b) உடல செல் (c) மகரந்தத்தூள் தாய் செல்

(d) மைக்ரோஸ்போர்

158) இனச்செல் (கேமீட்டுகள்) பற்றிய சரியான கூற்று எது?

(a) இருமயம் கொண்டவை (b) பாலுறுப்புகளை உருவாக்குபவை

(c) ஹார்மோன்களை உற்பத்தி செய்கின்றன

(d) இவை பால் உறுப்புகளிலிருந்து உருவாகின்றன

159) விந்துவை உற்பத்தி செய்யக்கூடிய அடர்த்தியான, முதிர்ந்த மிகவும் சுருண்ட தனித்த நாளம் இவ்வாறு அழைக்கப்படுகிறது?

(a) எபிடிடைமிஸ் (b) விந்து நுண்நாளங்கள் (c) விந்து குழல்கள்

(d) விந்துப்பை நாளங்கள்

160) விந்து உருவாக்கத்திற்கு ஊட்டமளிக்கும் பெரிய நீட்சியடைந்த செல்கள்

(a) முதல்நிலை விந்து வளர் உயிரணு (b) செர்டோலி செல்கள் (c) லீடிக் செல்கள்

(d) ஸ்பெர்மட்டோகோனியா

161) ஈஸ்ட்ரோஜனை உற்பத்தி செய்வது

(a) பிட்யூட்டரியின் முன்கதுப்பு (b) முதன்மை பாலிக்கிள்கள்

(c) கிராஃபியன் பாலிக்கிள்கள் (d) கார்பஸ் லூட்டியம்

162) கீழ்க்கண்டவற்றுள் எது IUCD ?

(a) காப்பர் – டி (b) மாத்திரைகள் (Oral Pills) (c) கருத்தடை திரைச் சவ்வு

(d) அண்டநாளத் துண்டிப்பு

163) மெண்டலின் கருத்துப்படி அல்லீல்கள் கீழ்க்கண்ட பண்புகளைப் பெற்றுள்ளன.

இதன் விடைகள் விலை ரூ 150 மட்டும் WHATSAPP – 8056206308

(a) ஒரு ஜோடி ஜீன்கள் (b) பண்புகளை நிர்ணயிப்பது

(c) மரபணுக்களை (ஜீன்) உருவாக்குவது (d) ஒடுங்கு காரணிகள்

164) எந்நிகழ்ச்சியின் காரணமாக 9:3:3:1 உருவாகிறது?

(a) பிரிதல் (b) குறுக்கே கலத்தல் (c) சார்பின்றி ஒதுங்குதல் (d) ஒடுங்கு தன்மை

165) செல் பகுப்படையும் போது, ஸ்பின்டில் நார்கள் குரோமோசோமுடன் இணையும் பகுதி

(a) குரோமோமியர் (b) சென்ட்ரோசோம் (c) சென்ட்ரோமியர்

(d) குரோமோனீமா

166) சென்ட்ரோமியர் மையத்தில் காணப்படுவது _____ வகை குரோமோசோம்.

(a) டீலோ சென்ட்ரிக் (b) மெட்டா சென்ட்ரிக் (c) சப் – மெட்டா சென்ட்ரிக்

(d) அக்ரோ சென்ட்ரிக்

167) டி.என்.ஏ வின் முதுகெலும்பாக _____ உள்ளது.

(a) டீ ஆக்ஸி ரைபோஸ் சர்க்கரை (b) பாஸ்பேட் (c) நைட்ரஜன் காரங்கள்

(d) சர்க்கரை பாஸ்பேட்

168) ஒகசாகி துண்டுகளை ஒன்றாக இணைப்பது _____

(a) ஹெலிகேஸ் (b) டி.என்.ஏ பாலிமெரேஸ் (c) ஆர்.என்.ஏ பிரைமர்

(d) டி.என்.ஏ லிகேஸ்

169) மனிதனில் காணப்படும் குரோமோசோம்களின் எண்ணிக்கை _____

(a) 22 ஜோடி ஆட்டோசோம்கள் மற்றும் 1 ஜோடி அல்லோசோம்கள்

(b) 22 ஆட்டோசோம்கள் மற்றும் 1 அல்லோசோம் (c) 46 ஆட்டோசோம்கள்

(d) 46 ஜோடி ஆட்டோசோம்கள் மற்றும் 1 ஜோடி அல்லோசோம்

170) பன்மய நிலையில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குரோமோசோம்களை இழத்தல்_____ என அழைக்கப்படுகிறது.

(a) நான்மய நிலை (b) அன்யூபிளாய்டி (c) யூபிளாய்டி (d) பல பன்மய நிலை

171) உயிர்வழித் தோற்ற விதியின் கூற்றுப்படி

(a) தனி உயிரி வரலாறும் தொகுதி வரலாறும் ஒன்றாகத் திகழும்.

(b) தனி உயிரி வரலாறு தொகுதி வரலாற்றை மீண்டும் கொண்டுள்ளது

(c) தொகுதி வரலாறு தனி உயிரி வரலாற்றை மீண்டும் கொண்டுள்ளது

(d) தொகுதி வரலாறு மற்றும் தனி உயிரி வரலாறு ஆகியவற்றுக்கு இடையே தொடர்பில்லை

172) "பயன்பாடு மற்றும் பயன்படுத்தாமை" கோட்பாட்டை முன்மொழிந்தவர்.

இதன் விடைகள் விலை ரூ 150 மட்டும் WHATSAPP – 8056206308

(a) சார்லஸ் டார்வின் (b) எர்னஸ்ட் ஹெக்கல் (c) ஜீன் பாப்டிஸ்ட் லாமார்க்

(d) கிரிகர் மெண்டல்

173) பின்வரும் ஆதாரங்களுள் எது தொல்பொருள் வல்லுநர்களின் ஆய்விற்குப் பயன்படுகிறது?

(a) கருவியல் சான்றுகள் (b) தொல் உயிரியல் சான்றுகள்

(c) எச்ச உறுப்பு சான்றுகள் (d) மேற்குறிப்பிட்ட அனைத்தும்

174) தொல் உயிர்ப் படிவங்களின் காலத்தை அறிய உதவும் சிறந்த முறை

(a) ரேடியோ கார்பன் முறை (b) யுரேனியம் காரீய முறை

(c) பொட்டாசியம் ஆர்கான் முறை (d) அ மற்றும் இ

175) வட்டார இன தாவரவியல் என்னும் சொல்லை முதன் முதலில் அறிமுகப்படுத்தியவர்.

(a) கொரானா (b) J.W. கார்ஸ் பெர்கர் (c) ரொனால்டு ராஸ்

(d) ஹியுகோ டி விரிஸ்

176) ஓர் அனுபவமற்ற விவசாயி பயிர் மேம்பாட்டிற்காக எந்த முறையைப் பின்பற்றுவார்?

(a) போத்துத் தேர்வு முறை (b) கூட்டுத் தேர்வு முறை

(c) தூய வரிசைத் தேர்வு முறை (d) கலப்பினமாக்கம்

177) பூசா கோமல் என்பது _____ இன் நோய் எதிர்ப்புத் திறன் பெற்ற ரகம் ஆகும்.

(a) கரும்பு (b) நெல் (c) தட்டைப்பயறு (d) மக்காச் சோளம்

178) கலப்பினமாக்கம் மற்றும் தேர்வு செய்தல் மூலமாக உருவாக்கப்பட்ட, துரு நோய்க்கு எதிர்ப்புத் தன்மைப் பெற்ற ஹிம்கிரி என்பது____ இன் ரகமாகும்.

(a) மிளகாய் (b) மக்காச்சோளம் (c) கரும்பு (d) கோதுமை

179) தன்னுடைய 50 வது பிறந்த நாளைக் கொண்டாடிய, மில்லியன் மக்களின் உயிரைக் காப்பாற்றிய அதிசய அரிசி _____ஆகும்.

(a) IR 8 (b) IR 24 (c) அட்டாமிட்டா 2 (d) பொன்னி

180) உயிரித்தொழில்நுட்பத்தால் உருவாக்கப்பட்ட பின்வரும் எப்பொருள் மனிதனுக்கு பயன்படும் பொருள்களை உற்பத்தி செய்யப் பயன்படுகிறது?

(a) உயிரினங்களிடமிருந்து பெறப்பட்ட நொதி (b) வாழும் உயிரினங்கள்

(c) வைட்டமின்கள் (d) (அ) மற்றும் (ஆ)

181) DNA வை வெட்டப் பயன்படும் நொதி _____

(a) கத்தரிக்கோல் (b) ரெஸ்ட்ரிக்ஸன் எண்டோநியூக்ளியேஸ் (c) கத்தி

(d) RNA நொதிகள்

182) rDNA என்பது _____

இதன் விடைகள் விலை ரூ 150 மட்டும் WHATSAPP – 8056206308

(a) ஊர்தி DNA (b) வட்ட வடிவ DNA

(c) ஊர்தி DNA மற்றும் விரும்பத் தக்க DNA வின் சேர்க்கை (d) சாட்டிலைட் DNA

183) DNA விரல்ரேகை தொழில்நுட்பம் _____ DNA வரிசையை அடையாளம் காணும் கொள்கையினை அடிப்படையாகக் கொண்டது.

(a) ஓரிழை (b) திடீர்மாற்றமுற்ற (c) பல்லுருத்தோற்ற

(d) மீண்டும் மீண்டும் வரும் தொடர்

184) மாற்றம் செய்யப்பட்ட உள்ளார்ந்த அல்லது அயல் ஜீனைப் பெற்ற உயிரினங்கள் _____ என அழைக்கப்படுகின்றன.

(a) அயல் ஜீனைப் பெற்ற உயிரினங்கள்

(b) மரபுப் பண்பு மாற்றம் செய்ய்யப்பட்டவை (c) திடீர் மாற்றம் அடைந்தவை

(d) (அ) மற்றும் (ஆ)

185) ஹெக்சாபிளாய்டி கோதுமையில் (2n = 6x = 42) ஒற்றை மயம் (n) மற்றும் அடிப்படைத் தொகுதி (X) குரோமோசோம் எண்ணிக்கை முறையே _____ ஆகும்.

(a) n = 7 மற்றும் x = 21 (b) n = 21 மற்றும் x = 21 (c) n = 7 மற்றும் x = 7

(d) n = 21 மற்றும் x = 7

186) புகையிலைப் பழக்கம், அட்ரினலின் சுரப்பைத் தூண்டுகிறது. இதற்குக் காரணமான காரணி

(a) நிக்கோட்டின் (b) டானிக் அமிலம் (c) குர்குமின் (d) லெப்டின்

187) உலக புகையிலை எதிர்ப்பு தினம்

(a) மே 31 (b) ஜூன் 6 (c) ஏப்ரல் 22 (d) அக்டோபர் 2

188) சாதாரண செல்களை விட புற்றுநோய் செல்கள் கதிர்வீச்சினால் சுலபமாக அழிக்கப்படுகின்றன, ஏனெனில் அவை

(a) வேறுபட்ட உருவ அமைப்பு கொண்டவை (b) பிளவுக்கு உட்படுவதில்லை

(c) திடீர்மாற்றமடைந்த செல்கள் (d) துரித செல்பிரிதல் தன்மை கொண்டவை

189) நிணநீர் முடிச்சுகள் மற்றும் மண்ணீரலைத் தாக்கும் புற்றுநோய் வகை

(a) கார்சினோமா (b) சார்க்கோமா (c) லுயூக்கேமியா (d) லிம்போமா

190) அளவுக்கு மிஞ்சிய மதுப்பழக்கத்தினால் உருவாவது

(a) ஞாபக மறதி (b) கல்லீரல் சிதைவு (c) மாயத் தோற்றம்

(d) மூளைச் செயல்பாடு குறைதல்

191) இதயக்குழல் இதயநோய் ஏற்படக் காரணம்

இதன் விடைகள் விலை ரூ 150 மட்டும் WHATSAPP – 8056206308

(a) ஸ்ட்ரெப்டோகாக்கை பாக்டீரியா தொற்று (b) பெரிகார்டியத்தின் வீக்கம்

(c) இதய வால்வுகள் வலுவிழப்பு

(d) இதயத் தசைகளுக்கு போதிய இரத்தம் செல்லாமை

192) எபிதீலியல் செல்லில் புற்றுநோய் உருவாவதற்கு _____ என்ற பெயர்.

(a) லுயூக்கேமியா (b) சார்க்கோமா (c) கார்சினோமா (d) லிம்போமா

193) மெட்டாஸ்டாசிஸ் இதனுடைய தொடர்புடையது

(a) வீரியமிக்க கட்டி (மாலிக்னன்ட்) (b) தீங்கற்ற கட்டி (c) அ மற்றும் ஆ

(d) மகுடக் கழலை நோய்

194) பாலிபேஜியா என்ற நிலை _____ ல் காணப்படுகிறது.

(a) உடற்பருமன் (b) டயபடீஸ் மெல்லிடஸ் (c) டயாபடீஸ் இன்சிபிடஸ்

(d) எய்ட்ஸ்

195) மது அருந்தியவுடன், உடலில் முதலில் பாதிக்கப்படும் பகுதி

(a) கண்கள் (b) செவி உணர்வுப் பகுதி (c) கல்லீரல்

(d) மைய நரம்பு மண்டலம்

196) கீழுள்ளவற்றுள் எது/எவை புதைபடிவ எரிபொருட்கள்
i. தார்
ii. கரி
iii. பெட்ரோலியம்

(a) i மட்டும் (b) i மற்றும் ii (c) ii மற்றும் iii (d) i, ii மற்றும் iii

197) கழிவுகளை மேலாண்மை செய்வதற்காக கீழுள்ளவற்றுள் எவற்றினை நீவிர் பயன்படுத்துவீர்?

(a) கழிவுகள் உருவாகும் அளவைக் குறைத்தல்.

(b) கழிவுகளை மறு பயன்பாட்டு முறையில் பயன்படுத்துதல்

(c) கழிவுகளை மறுசுழற்சி செய்தல் (d) மேலே உள்ளவை அனைத்தும்

198) வாகனங்கள் வெளியேற்றும் புகையில் உள்ள வாயுக்கள்
i. கார்பன் மோனாக்சைடு
ii. சல்பர் டை ஆக்சைடு
iii. நைட்ரஜன் ஆக்ஸைடுகள்

(a) i மற்றும் ii (b) i மற்றும் iii (c) ii மற்றும் iii (d) i, ii மற்றும் iii

199) மண்ணரிப்பைத் தடுக்கப் பயன்படுவது

(a) காடுகள் அழிப்பு (b) காடுகள்/மரம் வளர்ப்பு (c) அதிகமாக வளர்த்தல்

(d) தாவரப் பரப்பு நீக்கம்

200) புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலம்

இதன் விடைகள் விலை ரூ 150 மட்டும் WHATSAPP – 8056206308

(a) பெட்ரோலியம் (b) கரி (c) அணுக்கரு ஆற்றல் (d) மரங்கள்

201) கீழுள்ளவற்றுள் மண்ணரிப்பு அதிகமாக காணப்படும் இடம்

(a) மழைப்பொழிவு இல்லாத இடம் (b) குறைவான மழை பொழிவு உள்ள இடம்

(c) அதிகமான மழைப்பொழிவு உள்ள இடம் (d) இவற்றில் எதுவுமில்லை

202) கீழுள்ளவற்றுள் தீர்ந்து போகாத வளம்/வளங்கள்

(a) காற்றாற்றல் (b) மண்வளம் (c) வன உயிரி (d) மேலே உள்ள அனைத்தும்

203) கிராமங்களில் கிடைக்கும் பொதுவான ஆற்றல் மூலம்/மூலங்கள்

(a) மின்சாரம் (b) கரி (c) உயிரி வாயு

(d) மரக்கட்டைகள் மற்றும் விலங்குகளின் கழிவு

204) பசுமை இல்ல விளைவு என குறிப்பிடப்படுவது

(a) பூமி குளிர்தல் (b) புற ஊதாக் கதிர்கள் வெளி செல்லாமல் இருத்தல்

(c) தாவரங்கள் பயிர் செய்தல் (d) பூமி வெப்பமாதல்

205) மிக மலிவான வழக்கமான வர்த்தக ரீதியிலான தீர்ந்து போகாத ஆற்றல் மூலம்

(a) நீர் ஆற்றல் (b) சூரிய ஆற்றல் (c) காற்றாற்றல் (d) வெப்ப ஆற்றல்

206) புவி வெப்பமாதலின் காரணமாக ஏற்படக்கூடிய விளைவு

(a) கடல் மட்டம் உயர்தல் (b) பனிப்பாறைகள் உருகுதல்

(c) தீவுக்கூட்டங்கள் மூழ்குதல் (d) மேலே கூறிய அனைத்தும்

207) கீழே கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளில் காற்றாற்றல் குறித்த தவறான கூற்று எது?

(a) காற்றாற்றல் ஒரு புதுப்பிக்கத்தக்க ஆற்றல்

(b) காற்றாலையின் இயற்கைகள் மின்மோட்டார் மூலம் இயக்கப்படுகின்றன.

(c) காற்றாற்றல் மாசு ஏற்படுத்தாமல் உற்பத்தி செய்யப்படுகிறது

(d) காற்றாற்றலைப் பயன்படுத்துவதன் மூலம் புதைபடிவ எரிபொருட்கள் பயன்பாட்டினைக் குறைக்கலாம்.

208) அசைவூட்டும் காணொளிகளை உருவாக்க பயன்படும் மென்பொருள் எது?

(a) Paint (b) PDF (c) MS Word (d) Scratch

209) பல கோப்புகள் சேமிக்கப்படும் இடம்

(a) கோப்புத் தொகுப்பு (b) பெட்டி (c) Paint (d) ஸ்கேனர்

210) நிரல் (script) உருவாக்கப் பயன்படுவது எது?

(a) Script area (b) Block palette (c) Stage (d) Sprite

211) நிரலாக்கத்தைத் தொகுக்கப் பயன்படுவது எது?

இதன் விடைகள் விலை ரூ 150 மட்டும் WHATSAPP – 8056206308

(a) Inkscape (b) Script editor (c) Stage (d) Sprite

212) பிளாக்குகளை (Block) உருவாக்க பயன்படுவது எது?

(a) Block palette (b) Block menu (c) Script area (d) Sprite

213) விசையின் செயல்பாட்டால் பொருள் மீது ஏற்படும் விளைவுகளை பற்றிய அறிவியல் பாடம் _____

(a) இயங்கியல் (b) நிலையியல் (c) இயக்கவிசையியல் (d) இயந்திரவியல்

214) விசையின் செயல்பாட்டால் ஓய்வு நிலையிலுள்ள பொருள்மீது ஏற்படும் விளைவுகளைப் பற்றிய அறிவியல்

(a) நிலையியல் (b) இயக்கவியல் (c) இயக்கவிசையியல் (d) இயந்திரவியல்

215) விசையின் செயல்பாட்டால் இயக்க நிலையிலுள்ள பொருள் மீது ஏற்படும் விளைவுகளைப் பற்றிய அறிவியல்

(a) இயந்திரவியல் (b) நிலையியல் (c) இயங்கியல் (d) ஏதுமில்லை

216) நிலையாக உள்ள ஒவ்வொரு பொருளும் தமது ஓய்வு நிலை மாற்றத்தை எதிர்க்கும் பண்பு

(a) இயக்கத்தில் நிலைமம் (b) திசையில் நிலைமம் (c) விசையில் நிலைமம்

(d) ஓய்வில் நிலைமம்

217) இயக்க நிலையில் ஒவ்வொரு பொருளும் தமது ஓய்வு நிலை மாற்றத்தை எதிர்க்கும் பண்பு

(a) இயக்கத்தில் நிலைமம் (b) திசையில் நிலைமம் (c) விசையில் நிலைமம்

(d) ஏதுமில்லை

218) இயக்க நிலையில் உள்ள பொருள் இயங்கும் திசையிலிருந்து மாறாமல், திசை மாற்றத்தினை எதிர்க்கும் பண்பு

(a) விசை (b) உந்தம் (c) திசையில் நிலைமம் (d) நியூட்டனின் விதி

219) ஒரு டம்ளர் பாலில் சர்க்கரையை கலக்குவது

(a) விசை (b) உந்தம் (c) திசையில் நிலைமம் (d) இயக்கத்தில் நிலைமம்

220) தரை விரிப்பினை ஒரு கம்பியினால் தட்டி சுத்தம் செய்வது எவ்வகை நிலைமத்திற்கு எடுத்துக்காட்டு?

(a) இயக்க (b) ஓய்வு (c) திசையில் (d) உந்தம்

221) நிலைமம் என்பது

(a) பொருளின் தன்மை (b) விசையின் வகை (c) ஒரு பொருளின் வேகம்

(d) ஏதுமில்லை

222) ஓய்வு நிலையிலுள்ள ஒரு கனப் பொருளின் உந்தம்

இதன் விடைகள் விலை ரூ 150 மட்டும் WHATSAPP – 8056206308

(a) மிக அதிகம் (b) முடிவிலி (c) சுழி (d) சிறியது

223) பேருந்தின் மீது கயிறால் கட்டப்பட்ட பளுவானது எதற்கு எடுத்துக்காட்டு

(a) இயக்கத்தில் நிலைமம் (b) திசையில் நிலைமம் (c) ஓய்வில் நிலைமம்

(d) உந்தம்

224) A மற்றும் B என்பன இரு பொருள்கள், அவற்றின் நிறை 100kg மற்றும் 75kg எனில்

(a) இரண்டும் சமமான நிலைமத்தைக் கொண்டிருக்கும்.

(b) B க்கு அதிக நிலைமம் (c) A அதிக நிலைமம் உடையது

(d) இரண்டிற்கும் நிலைமம் குறைவு

225) நிலைமத்திற்கான இயற்பியல் அளவு

(a) அடர்த்தி (b) எடை (c) விசை (d) நிறை

226) ஒரு கத்தியை கூர் செய்யும் போது சாணை பிடிக்கும் கருவியின் சக்கரத்தின் விளிம்பிற்கு தொடு புள்ளியில் உண்டாகும் பொறிகள் இதற்கு எடுத்துக்காட்டு.

(a) ஓய்வில் நிலைமம் (b) இயக்கத்தில் நிலைமம் (c) திசையில் நிலைமம்

(d) செலுத்தப்பட்ட விசை

227) விசையினை வரையறுக்கும் விதி

(a) நியூட்டனின் முதல்விதி (b) நியூட்டனின் இரண்டாம் விதி

(c) நியூட்டனின் மூன்றாம் விதி (d) ஈர்ப்பியல் விதி

228) விசையின் SI அலகு

(a) ஆற்றல் (b) ஜூல் (c) நியூட்டன் (d) டைன்

229) இரு பொருள்களுக்கிடையேயான நேரடி தொடுதலால் செலுத்தப்படும் விசை

(a) தொடு விசை (b) தொடா விசை (c) சமன் செய்யப்பட்ட விசை

(d) சமன் செய்யப்படாத விசை

230) ஈர்ப்பு, காந்த மற்றும் மின் காந்த விசைகள் இவ்விசைக்கு எடுத்துக்காட்டுகள்

(a) தொடு விசை (b) தொடா விசை (c) சமன் செய்யப்பட்ட விசை

(d) சீரற்ற விசை

231) ஒரு கதவினை திறத்தல் இதற்கான எடுத்துக்காட்டு

(a) ஒரு தொடர் விசை (b) தொடு விசை (c) சமன் செய்யப்பட்ட விசை

(d) சமன் செய்யப்படாத விசை

232) ஒரு பொருளின் முடுக்கம் இதனால் ஏற்படுகிறது.

இதன் விடைகள் விலை ரூ 150 மட்டும் WHATSAPP – 8056206308

(a) சமன் செய்யப்பட்ட விசை (b) சமன் செய்யப்படாத விசை (c) சமநிலை

(d) இரட்டை

233) ஒரு விசையின் சுழற்சி அல்லது திருப்புதல் விளைவு

(a) உந்தம் (b) திருப்பு விசை (c) இரட்டை (d) ஏதுமில்லை

234) சமமான அல்லது சமமற்ற விசைகள் ஒரே திசையில் ஒரு பொருள் மீது இணையாகச் செயல்பட்டால் அவை

(a) ஒத்த இணைவிசைகள் (b) தொகுபயன் விசை (c) மாறுபட்ட இணைவிசைகள்

(d) எதிர்சமன்

235) சமமான அல்லது சமமற்ற விசைகள் எதிர் எதிர் திசையில் ஒரு பொருள் மீது இணையாகச் செயல்பட்டால் அவை?

(a) தொகுபயன் விசை (b) ஒத்த இணைவிசைகள் (c) மாறுபட்ட இணைவிசைகள்

(d) ஏதுமில்லை

236) இயக்கத்திற்கான நியூட்டனின் இரண்டாம் விதிக்கான வாய்பாடு

(a) விசை =நிறை x முடுக்கம் (b) திசைவேகம் =முடுக்கம் x காலம்

(c) உந்தம் =நிறை x திசைவேகம் (d) வேகம் =தொலைவு x நேரம்

237) ஒரு பொருளின் முடுக்கம் அதிகரிக்கும் போது அதன் நிகர விசையும் அதிகரிப்பது இதைச் சார்ந்தது

(a) பருமன் (b) நிறை (c) வடிவம் (d) அடர்த்தி

238) ஒரு பனி சறுக்கு விளையாட்டு வீரர் தந்து கால் தசைகளால் கடினமான உந்தித்தள்ளி வேகமாக நகரத் தொடங்குகிறார். இது

(a) நியூட்டனின் முதல் விதி (b) நியூட்டனின் இரண்டாம் விதி

(c) நியூட்டனின் மூன்றாம் விதி (d) அழிவின்மை விதி

239) ஒரு இருசக்கர வாகனத்தில் செல்லும் போது திடீரென ஒரு பெரிய பாறை மீது மோதுகிறது. வண்டியின் இயக்கம் நிறுத்தப்பட்டு ஓட்டுபவர் தூக்கி எறியப்படுவார். இது

(a) நியூட்டனின் முதல்விதி (b) நியூட்டனின் இரண்டாம் விதி

(c) நியூட்டனின் மூன்றாம் விதி (d) உந்தமாறா விதி

240) ஒரு படகை துடுப்பின் மூலம் செலுத்தும் போது படகு முன்னே செல்வது

(a) நியூட்டனின் முதல் விதி (b) நியூட்டனின் இரண்டாம் விதி

(c) நியூட்டனின் மூன்றாம் விதி (d) உந்த மாறா விதி

241) பொருள் சமநிலையில் உள்ளதெனில் தொகுபயன் விசையின் மதிப்பு

(a) முடிவிலி (b) ஒன்று (c) சுழி (d) ஏதுமில்லை

242) இது ஒரு வெக்டர் அளவு

இதன் விடைகள் விலை ரூ 150 மட்டும் WHATSAPP – 8056206308

(a) வேகம் (b) உந்தம் (c) தொலைவு (d) நீளம்

243) கணத்தாக்கின் SI அலகு

(a) Ns (b) Ns^2 (c) $kgms^{-2}$ (d) kgm^2s^{-2}

244) ஒரு கிகி நிறையுள்ள ஒரு பொருள் மீது செயல்படும் புவியின் ஈர்ப்பு விசை

(a) 8.9 N (b) 9.8 N (c) 980 N (d) 1 N

245) செயல் அல்லது எதிர்செயல் விசைகளின் தொகுபயன்

(a) சுழியைவிட அதிகம் (b) சுழியைவிட குறைவு (c) சுழி (d) ஒன்று

246) உந்த மாறுபாட்டிற்கு சமமான இயற்பியல் அளவு

(a) திசைவேகம் (b) முடுக்கம் (c) விசை (d) கணத்தாக்கு

247) ஒரு பொருள் முடுக்கமடைகிறது எனில்

(a) அதன் வேகம் எப்போதும் அதிகரிக்கும்

(b) ஒரு விசை எப்போதும் அதன் மீது செயல்படும்

(c) அதன் திசைவேகம் எப்போதும் அதிகரிக்கும்

(d) திசைவேகம் எப்போதும் குறையும்

248) 10kg நிறையுள்ள ஒரு பொருள்மீது செயல்படும் விசை 20 N எனில் அதனால் உண்டாகும் முடுக்கம்

(a) $1\ ms^{-2}$ (b) $2\ ms^{-2}$ (c) $20\ ms^{-2}$ (d) $10\ ms^{-2}$

249) கணத்தாக்கு=

(a) ma (b) Ft (c) mv (d) $\frac{v-u}{t}$

250) உந்தமாறுபாட்டு வீதத்திற்கு சமமான இயற்பியல் அளவு

(a) இடப்பெயர்ச்சி (b) முடுக்கம் (c) விசை (d) கணத்தாக்கு

251) புவியீர்ப்பு முடுக்கம் 'g' ன் மதிப்பு

(a) புவியின் பரப்பிற்கு மேலே செல்லச் செல்ல உயரும்

(b) புவியின் அடி ஆழத்திற்கு செல்லச் செல்ல அதிகமாகும்

(c) புவியின் மையத்தில் சுழியாகும்

(d) துருவப்பகுதியில் குறைவு நிலநடுக் கோட்டுப் பகுதியில் அதிகம்

252) ராக்கெட் வேலை செய்யும் தத்துவம்

(a) நிறைமாறா கொள்கை (b) ஆற்றல்மாறா கொள்கை

(c) உந்தமாறாக் கொள்கை (d) திசைமாறாக் கொள்கை

253) 1 கிகி நிறையுள்ள ஒரு பொருள் புவியால் கவரப்படும் விசை

இதன் விடைகள் விலை ரூ 150 மட்டும் WHATSAPP – 8056206308

(a) 9.8 N (b) 6.67×10^{11} (c) 1 N (d) $9.8\ ms^{-1}$

254) நியூட்டனின் மூன்றாம் இயக்க விதிப்படி வினையும், எதிர்வினையும்

(a) ஒரே பொருளின் மீது எப்போதும் செயல்படும்

(b) ஓத அளவும், திசையும் உடையது (c) எப்போதும் எதிர் திசைகளில் செயல்படும்

(d) இருபொருள்களின் மீது ஒன்றுக்கொன்று செங்குத்தாக செயல்படும்

255) நீர் நிரம்பிய ஒரு லாரியில் $\frac{2}{3}$ அளவு உயரத்திற்கு தண்ணீர் நிரம்பியுள்ளது. அது ஒரு சீரான வேகத்துடன் செல்லும் போது திடீரென தடை (break) செலுத்தப்படுகிறது எனில் தண்ணீர்

(a) பின்னோக்கி நகரும் (b) பாதிப்பு ஏதும் இருக்காது (c) சூழல் ஏற்படும்

(d) முன்னோக்கி நகரும்

256) ஒரு முடுக்குவிக்கப்பட்ட இயக்கத்தில் நேர்க்கோட்டு பாதையில் இயங்கும் ஒரு பொருளுக்கு பின்வரும் கூற்றில் எது பொருந்தாது?

(a) அதன் வேகம் மாறிக்கொண்டே இருக்கும்

(b) அதன் திசைவேகம் எப்போதும் மாறும்

(c) எப்போதும் புவியிலிருந்து வெளியே செல்லும்

(d) ஒரு விசை எப்போதும் அதன் மீது செயல்படும்

257) பந்து உயரே எறியப்படும் போது 'g' ன் மதிப்பு

(a) சுழி (b) நேர்(+) (c) எதிர்(-) (d) புறக்கணிக்கத்தக்கது

258) இரு பொருட்களுக்கிடையேயான தொலைவு வழக்கமான தொலைவை விட 6 மடங்கு அதிகமானால் விசையானது _____ ஆகும்.

(a) 36 மடங்கு (b) 6 மடங்கு (c) 12 மடங்கு (d) $\frac{1}{36}$

259) இரு பொருட்களின் நிறைகளும் பாதியாக குறைக்கப்படும் போது அவற்றின் இடையிலுள்ள தூரத்தில் எந்த மாற்றமும் இல்லை எனில், அதற்கிடையேயான ஈர்ப்பு விசை

(a) $\frac{f}{4}$ (b) $\frac{f}{2}$ (c) f (d) 2f

260) நியூட்டனின் ஈர்ப்பியல் விதி எதற்குப் பொருந்தும்

(a) சிறிய பொருட்களுக்கு மட்டும் (b) தாவரங்களுக்கு மட்டும்

(c) வடிவத்தைப் பொருத்து அல்லாமல் அனைத்துப் பொருட்களுக்கும்

(d) சூரிய குடும்பத்திற்கு மட்டும்

261) உயர் விலைமதிப்புடைய பொருட்களின் நிறை 'w' உடைய ஒரு பெட்டியை ஒரு திருடன் திருடிக்கொண்டு h என்ற உயரம் உடைய சுவரிலிருந்து கீழே குதிக்கிறான். தரையை அடைவதற்கு முன் உணரும் பளு

இதன் விடைகள் விலை ரூ 150 மட்டும் WHATSAPP – 8056206308

(a) $\frac{w}{2}$ (b) சுழி (c) w (d) 2w

262) புவியின் நிறையில் மாற்றம் இல்லாமல் அதன் ஆறாம் 1 விழுக்காடு சுருங்கும்போது புவியின் பரப்பின் மீதான ஈர்ப்பு முடுக்கம்

(a) குறையும் (b) மாற்றம் அடைவதில்லை (c) அதிகரிக்கும் (d) ஏதுமில்லை

263) பின்வரும் எந்த அளவு புவியின் மையத்தில் சுழி

(a) நிறை (b) எடை (c) இரண்டும் (d) ஏதுமில்லை

264) பொது ஈர்ப்பு மாறிலியின் மதிப்பு

(a) $6.743 \times 10^{-11}\ Nm^2\ kg^{-1}$ (b) $6.673 \times 10^{-11}\ Nm^2\ kg^{-1}$ (c) $6.743 \times 10^{-11}\ Nm^2\ kg^{-1}$

(d) $6.673 \times 10^{-11}\ Nm^2\ kg^{-1}$

265) எடையின் அளவு குறிப்பிடப்படும் அலகு

(a) இடப்பெயர்ச்சி (b) நிறை (கிகி) (c) விசை (நியூட்டன்) (d) ஏதுமில்லை

266) புவியைச் சுற்றி வரும் ஒரு துணைக்கோளில் ஒரு பொருளின் எடை

(a) சுழி (b) உண்மை எடை (c) உண்மை எடையைவிட குறைவு

(d) உண்மை எடையை விட அதிகம்

267) புவியை நோக்கிப் பொருள்கள் விழும் இயக்கம்

(a) புவிஈர்ப்பு சுழற்சி (b) எடையற்ற நிறை (c) புவி ஈர்ப்பு முடுக்கம்

(d) புவி ஈர்ப்பு விசை

268) அண்டத்தில் இரு பொருட்களுக்கிடையேயான ஈர்ப்பு விசை இதனை சார்ந்து இருக்காது

(a) அவற்றிற்கிடையேயான தொலைவு (b) அவற்றின் நிறைகளின் தொலைவு

(c) அவற்றின் நிறைகளின் கூடுதல் (d) ஈர்ப்பு மாறிலி

269) ஒரு பொருள் புவியின் பரப்பிலிருந்து தடையின்றி கீழே விழும் போது அதன் முடுக்கம்

(a) $9.4\ ms^{-2}$ (b) $9.1\ ms^{-2}$ (c) $9.8\ ms^{-2}$ (d) $9.6\ ms^{-2}$

270) புவி ஈர்ப்பு முடுக்கம் புவியில் பின்வருவனவற்றுள் எதனுடன் மாறும்?

(a) தொலைவு (b) உயரம் (c) ஒரு பொருளின் நிறை (d) அனைத்தும்

271) நிறை 1000 kg உடைய ஒரு மின்தூக்கி $1\ ms^{-2}$ முடுக்கத்துடன் மேல் நோக்கிய திசையில் இயங்குகிறது. அதனுடன் இணைக்கப்பட்ட கம்பியில் உருவாகும் நீட்சி

(a) 10,000 N (b) 10,800 N (c) 9,800 N (d) 11,000

272) ஒரு மின்தூக்கி மேல் நோக்கிய திசையில் முடுக்கப்படும்போது ஒரு பொருளின் தோற்ற எடை

இதன் விடைகள் விலை ரூ 150 மட்டும் WHATSAPP – 8056206308

(a) உண்மை எடையை விட அதிகம் (b) உண்மை எடைக்கு சமம்

(c) உண்மை எடையை விட குறைவு (d) உண்மை எடையை விட அதிகம்

273) வெட்டும் கருவிகள் கூரிய முனை உடையவை ஏனெனில்

(a) தொடும் பரப்பு அதிகம் (b) அழுத்தம் குறையும்

(c) பரப்பு குறையும் அழுத்தம் அதிகரிக்கும்

(d) பரப்பு அதிகரித்து அழுத்தம் அதிகரிக்கும்

274) புவியிலிருந்து திடீரென ஈர்ப்புவிசை மறையுமானால் நிகழ்வது

(a) எல்லாப் பொருட்களும் ஒரு விரைவு இறக்கைச் சுழற்சியில் இயங்கும்

(b) எல்லாப் பொருட்களும் மிதக்கும் (c) சாத்தியமல்ல (d) கூற இயலாது

275) ஒரு கிராம் நிறையுள்ள பொருளை 1 செ.மீ.வி$^{-2}$ அளவிற்கு முடுக்குவிக்க தேவைப்படும் விசை

(a) 1N (b) 10 (c) 10^{-2} டைன் (d) 1 டைன்

276) இரு பொருட்கள் குறிப்பிட்ட இடைவெளியில் உள்ள போது அவற்றிற்கிடையேயுள்ள விசை F என்க. அவற்றின் தொலைவு இரு மடங்கானால் அவற்றின் ஈர்ப்பு விசை ..... ஆக இருக்கும்.

(a) 1N (b) F/2 (c) F/4 (d) 4F

277) ஒவ்வொரு பொருளும் தன்மீது சமன் செய்யப்படாத புறவிசை ஏதும் செயல்படாத வரையில், தனது ஓய்வு நிலைமையோ, நேர்க்கோட்டு இயக்க நிலையையோ மாற்றுவதை எதிர்க்கும் தன்மை_____ எனப்படும்.

(a) உந்தம் (b) நிலைமம் (c) திருப்புத்திறன் (d) கணத்தாக்கு

278) விசையானது_____ கொண்ட ஓர் வெக்டார் அளவாகும்.

(a) எண்மதிப்பு மட்டும் (b) திசை மட்டும் (c) எண்மதிப்பும், திசையும்

(d) இவை எதுவுமில்லை

279) கீழ்க்கண்ட நியூட்டனின் இயக்க விதிகளில் எது விசை மற்றும் நிலைமத்தை விளக்குகிறது?

(a) நியூட்டனின் முதல் விதி (b) நியூட்டனின் இரண்டாம் விதி

(c) நியூட்டனின் மூன்றாம் விதி (d) வெப்ப இயக்கவியலின் கழிய விதி

280) கிணற்றில் இருந்து நீர் எடுக்க செயன்படும் விசை

(a) சமன் செய்யப்பட்ட விசை (b) சமன் செய்யப்படாத விசைகள்

(c) இணைவிசைகள் (d) தொகுபயன் விசைகள்

281) கீழ்க்கண்டவற்றில் இரட்டைகளின் திருப்புத் திறனுக்கு எடுத்துக்காட்டு

இதன் விடைகள் விலை ரூ 150 மட்டும் WHATSAPP – 8056206308

(a) நீர் குழாய் திறத்தல் (b) பம்பரத்தின் சுழற்சி (c) திருகின் சுழற்சி

(d) இவை அனைத்தும்

282) கீழ்க்கண்டவற்றில் நியூட்டனின் இரண்டாவது இயக்க விதியை விளக்கும் வாக்கியம்

(a) விசையாளது அப்பொருளின் உந்த மாறுபாட்டு வீதத்திற்கு நேர்த்தசுவில் அமையும்.

(b) இவ்விதி விசையின் எண்மதிப்பை அளவிட உதவுகிறது.

(c) விசை முடுக்கத்தினை ஏற்படுத்துகிறது.

(d) மேற்கண்ட அனைத்தும் நியூட்டனின் இரண்டாவது இயக்க விதியை விளக்குகிறது.

283) 1 kg f - ன் மதிப்பு

(a) 980 N (b) 98 N (c) 9.8 N (d) 9.8 டைன்

284) நியூட்டனின் இரண்டாவது இயக்க விதியை இவ்வாறு அழைக்கலாம்.

(a) விசையின் விதி (b) நிலைமத்தின் விதி (c) கணத்தாக்கு விதி

(d) உந்த மாறா விதி

285) கணத்தாக்கு (J) ன் மதிப்பு

(a) விசை மற்றும் கால அளவின் பெருக்கற்பலன்

(b) நிறை மற்றும் திசைவேகத்தின் பெருக்கற்பலன்

(c) நிறை மற்றும் முடுக்கத்தின் பெருக்கற்பலன்

(d) விசை மற்றும் திசைவேகத்தின் பெருக்கற்பலன்

286) இரு நிறைகளுக்கு இடைப்பட்ட விசை

(a) எப்போதும் ஈர்ப்பு விசையாகும் (b) எப்போதும் விலக்கு விசையாகும்

(c) ஈர்ப்பு விசையாகவோ அல்லது விலக்கு விசையாகவோ இருக்கும்

(d) கணிக்க முடியாது

287) இரு நிறைகளுக்கு இடைப்பட்ட விசை

(a) நிறைகள் அமைந்துள்ள ஊடகத்தை சார்ந்தது

(b) நிறைகள் அமைந்துள்ள ஊடகத்தை சார்ந்தது அல்ல

(c) ஊடகத்தை சார்ந்தோ அல்லது சாராமலோ இருக்கலாம்

(d) இவை எதுவுமில்லை

288) 'G' ன் SI அலகு

(a) Nm^2kg^{-2} (b) $Nm^2\ kg^2$ (c) $Nm^{-2}\ kg^2$ (d) $Nm^{-2}\ kg^{-2}$

289) நாம் புவியின் தரைப்பகுதியில் இருந்து உயரச் செல்ல செல்ல புவி ஈர்ப்பு முடுக்கம் படிப்படியாக

இதன் விடைகள் விலை ரூ 150 மட்டும் WHATSAPP – 8056206308

(a) அதிகரிக்கும் (b) குறையும் (c) சுழியாகும் (d) ஈறில்லா மதிப்பைப் பெறும்

290) எடையின் திசை எப்போதும்

(a) புவியின் மையத்தை நோக்கி செயல்படும்

(b) புவியின் மையத்தை விட்டு விலகிச் செல்லும் (c) கணித்து கூற முடியாது

(d) புவியின் மையத்தை நோக்கியோ அல்லது விலகியோ செல்லும்

291) புவியின் மேற்பரப்பில் 60கிகி நிறையுள்ள மனிதனின் எடை

(a) 97.5 N (b) 60 N (c) 588 N (d) 65 N

292) தோற்ற எடை என்பது

(a) நமது உண்மை எடை (b) புவி ஈர்ப்பு விசையினால் தோன்றும் எடை

(c) பிற விசைகளால் ஏற்படும் எடை மாற்றம் (d) ஆ மற்றும் இ

293) ஒளியின் பாதை _____

(a) கதிர்கள் (b) புள்ளி (c) வரிகள் (d) கற்றை

294) கதிர்களின் தொகுப்பு _____

(a) வரிகள் (b) புள்ளிகள் (c) கற்றை (d) ஏதுமில்லை

295) ஒளியின் திசைவேகம்

(a) $3 \times 10^{-8}\ ms^{-1}$ (b) $3 \times 10^{8}\ ms^{-1}$ (c) $3 \times 10^{8}\ kms^{-1}$ (d) $3 \times 10^{-8}\ kms^{-1}$

296) ஒளியின் திசைவேகம் மற்றும் அலைநீளத்தின் தொடர்பு _____

(a) $g = c\lambda$ (b) $v = \frac{c}{\lambda}$ (c) $c = v\lambda$ (d) ஆ மற்றும் இ இரண்டும்

297) ஊதா மற்றும் சிவப்பு ஒளியின் அலைநீளங்கள் முறையே _____

(a) குறைந்தது, உயர்ந்தது (b) உயர்ந்தது, குறைந்தது (c) ஒரே அளவு

(d) ஏதுமில்லை

298) நாம் பொருட்களை காண்பது _____ நிகழ்வினால் ஆகும்.

(a) எதிரொளிப்பு (b) ஒளிவிலகல் (c) ஊடுருவல் (d) ஒளிச்சிதறல்

